# 12

# பெற்றோரைப் பராமரிப்போம்

رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا



என் இறைவனே! நான் குழந்தையாக இருந்தபொழுது என்னை அவர்கள் வளர்த்துப் பாதுகாத்தவாறே நீயும் அவ்விருவர் மீதும் அன்பும், அருளும் புரிவாயாக. (17:24)

‘முன்னொரு காலத்தில் மூன்று மனிதர்கள் நீண்டதொரு பயணம் சென்றனர். இடையில் காற்றுடன் கூடிய மழையில் அகப்பட்டுக் கொண்டபோது மலையடிவாரத்திலிருந்த குகையொன்றினுள் அவர்கள் ஒதுங்கினர். அவ்வேளை பெரியதொரு பாராங்கல் உருண்டு வந்து அக்குகையின் வாயிலை அடைத்துக் கொண்டது. அக்கல்லை குகை வாசலை விட்டும் நகர்த்த முடியாது என்பதைக் கண்டு திகைத்தனர். இக்கஷ்டத்திலிருந்து விடுபட அல்லாஹ்விடம் பிரார்த்திக்க முடிவெடுத்தனர். மூவரும் தாம் செய்த நல்ல அமல்களில் சிறப்பானதொன்றை முன்வைத்து அல்லாஹ்விடம் கையேந்தினர். முதலிருவரும் பிரார்த்தித்ததன் பின்னர் அவர்களில் மூன்றாமவர்,

‘அல்லாஹ்வே! எனக்கு வயது முதிர்ந்த தந்தையும் தாயும் இருக்கின்றனர். ஒவ்வொரு நாள் இரவும் அவர்களுக்கு நான் பால் கொடுப்பேன். அதற்குப்

பின்னர்தான் என் பிள்ளைகளுக்குக் கொடுப்பேன். ஒரு நாள் நான் வரத் தாமதமாகிவிட்டது. நான் வரும்போது அவர்களிருவரும் தூங்கிவிட்டனர். அவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்ப நான் விரும்பவில்லை. என்றாலும், அவர்கள் பருகுவதற்கு முன்னர் பாலை என் பிள்ளைகளுக்குக் கொடுக்க விரும்பவுமில்லை. அவர்கள் கண்விழிக்கும் வரை தூங்காமல் காத்திருக்க முடிவெடுத்தேன். எனது பிள்ளைகளோ பசியினால் அழுதனர். அவர்களின் அழுகுரல் கேட்டு எனது தந்தையும் தாயும் விழித்தனர். பின்னர் பாலை அருந்தினர். 'யா அல்லாஹ்! இதனை நான் உன் திருப்பொருத்தத்தை நாடியே செய்தேன். ஆகவே, இக்கல்லை நீக்கி எமக்கு வெளியேற வழியேற்படுத்தித் தருவாயாக!' எனப் பிரார்த்தித்தார். அக்கல் குகை வாசலிலிருந்து விலகியது. அப்போது குகையிலிருந்து அவர்கள் மூவரும் வெளியேறினர்.' (புஹாரி, முஸ்லிம்)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களுக்குச் சொன்ன இந்தச் சம்பவம், பெற்றோருக்குச் செய்த உபகாரத்தின் பயனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. தன் பிள்ளைகளை விடப் பெற்றோருக்கு முன்னுரிமை அளித்த அந்த மனிதரின் பிரார்த்தனைக்கு அல்லாஹ் உடனடியாகப் பதிலளித்துள்ளதை அவதானிக்கலாம். பெற்றோரின் திருப்தி கிடைத்தால் மாத்திரமே இறைவனின் திருப்தி கிடைக்கிறது. அதுவே அவரது பிரார்த்தனைகள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் ஆபத்து நீங்கவும் வழிவகுத்துள்ளது என்பதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

ஒரு மனிதர் செய்கின்ற நற்காரியங்களில் பெற்றோரைப் பேணுவது சிறப்பு மிக்கதாகும். அது அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்ள உதவுகின்றது எனப் பின்வரும் ஹதீஸ் விளக்குகிறது.

'தனது பெற்றோரைத் திருப்திப்படுத்தியவன் அல்லாஹ்வைத் திருப்திப்படுத்தியவன் ஆவான். பெற்றோரை அதிருப்திக்குள்ளாக்கியவன் அல்லாஹ்வின் அதிருப்தியைப் பெற்றவனாவான்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி)

பெற்றோருக்கு நன்மை செய்வது அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுத் தரும் என்பதைப் பின்வரும் ஹதீஸ் விளக்குகின்றது.

'ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான அமல் எது என வினவப்பட்டது.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவது என்றார்கள்' அதன் பின் எது எனக் கேட்டகப்பட்டபோது, 'பெற்றோருக்கு உபகாரம் செய்தல்' என்று பதிலுரைத்தார்கள்.' (புஹாரி, முஸ்லிம்)

அல்லாஹ்வுக்கு அடிபணிந்துவிட்ட முஸ்லிம் அதற்கடுத்ததாகத் தனது பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டும் என அல்குர்ஆன் கட்டளையிடுகின்றது. 'பெற்றோருக்கு உபகாரம் செய்வதை அல்லாஹ் விதியாக்கிவிட்டான்' (17:23)

இவ்வுலகில் ஒன்றும் அறியாத, எதற்கும் சக்தியற்ற நிலையில் பிறக்கின்ற குழந்தையைப் பேணிப் பாதுகாத்து, தேவையான உணவுகளையும் அறிவையும் புகட்டி பெற்றோர் வளர்த்தெடுக்கின்றனர். இதற்காக மாபெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்கின்ற பெற்றோருக்குக் கடன் தீர்க்க இவ்வுலகில் யாராலும் முடியாது. அதற்கீடாகத்தான் பெற்றோருக்கு உபகாரம் செய்வதை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது. இந்தவகையில் ஒருவர் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய உபகாரங்களைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

1. நன்றி செலுத்துதல்
2. பெற்றோருக்காகப் பிரார்த்தித்தல்
3. கனிவாகப் பேசுதலும் அவர்களின் சொல்லைக் கேட்டலும்
4. அன்பாகவும், இரக்கமாகவும் நடந்து கொள்ளல்
5. பெற்றோரிடம் அனுமதி பெற்று காரியங்களில் ஈடுபடுதல்
6. பெற்றோரின் நண்பர்களையும் உறவினர்களையும் மதித்தல்

இவற்றை விட பெற்றோருக்கு நோவினை செய்வது பெரும்பாவம் என இஸ்லாம் எச்சரிக்கின்றது. பெற்றோரைப் பராமரிப்பதை ஈமானுக்கு அடுத்த விடயமாகக் கருதும் இஸ்லாம், அவர்களை நிந்திப்பது, அவர்களுக் குக் கட்டுப்படாதிருப்பது, அவர்களைத் தூற்றுவது என்பன ஷிர்க்கிற்கு அடுத்த பெரும்பாவமாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

ஏனைய பாவங்களைச் செய்பவனை அல்லாஹ் மறுமை வரை விட்டு வைக்கின்றான். ஆனால், பெற்றோரைத் துன்புறுத்துபவனை அல்லாஹ் இவ்வுலகிலேயே துன்பத்திற்கு உள்ளாக்குகின்றான்.

‘அல்லாஹுதஆலா பெற்றோரை நிந்திப்பதைத் தவிர ஏனைய பாவங்களுக்கான தண்டனையை, தான் நாடியவாறு மறுமை வரை பிற்படுத்துகின்றான். ஏனெனில், இதற்கான தண்டனையை மரணத்திற்கு முன்னர் இவ்வுலகிலேயே வழங்கிவிடுகின்றான்’ (புஹாரி) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எனவே, எமது பெற்றோரைக் கண்ணியப்படுத்தி, அவர்களுக்கு உபகாரம் செய்து இம்மையிலும் மறுமையிலும் இறை திருப்தியைப் பெற்றுக் கொள்ள உறுதி கொள்வோமாக!

**செயற்பாடு**

‘பெற்றோரைக் கண்ணியப்படுத்துவோம்’ எனும் தலைப்பில் உரையாடல் ஒன்றை நிகழ்த்துக.